**செய்தி வெளியீடு எண்:671** **நாள்: 10.10.2017**

**செய்தி வெளியீடு**

**மா**ண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. பி. பாலகிருஷ்ணாரெட்டி அவர்கள் இன்று (10.10.2017) காஞ்சிபுரம் மாவட்டம் மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள உட்கட்டமைப்பு வசதிகளை ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின் போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு முதன்மைச் செயலர் திரு. தீரஜ்குமார் இ.ஆ.ப, அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர்–செயலர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ.ப அவர்கள், விளையாட்டுப் பல்கலைக்கழக பதிவாளர் திரு. த. ராதாகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உட்கட்டமைப்பு வசதிகளான பல்கலைக்கழக அறிவியல் ஆராய்ச்சிக் கூடம், நூலகம், கலையரங்கம், வகுப்பறைகள், விடுதியின் கூடுதல் கட்டிடம், உணவுக் கூடம், விளையாட்டு முகாம் மையம் ஆகியவற்றைப் பார்வையிட்டு தற்போதைய பணிகளின் நிலை குறித்து ஆய்வு செய்தார்கள்.

மேலும் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைகக்கழகத்தில் அமைக்கப்பட்டு வரும் விளையாட்டு வசதிகளான சைக்கிள் வேலோடிரம், படகு போட்டிகளுக்கான பயிற்சியிடம், நீர்விளையாட்டு (CANOEING AND KAYAKING) மையம், பல்வகை உள்விளையாட்டு அரங்கம், 400 மீட்டர் சிந்தடிக் தடகள ஓடுபாதை ஆகியவற்றையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அப்போது விளையாட்டு வீரர்களுக்கான உட்கட்டமைப்பு மற்றும் பயிற்சி வசதிகளை மேம்படுத்திட மேற்கொள்ளப்படும் இந்த பணிகள் தரமானதாகவும், சிறப்பானதாகவும் விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று சம்பந்தப்பட்ட கட்டுமான பொறியாளர்களுக்கும், தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கினார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**